முடிய தேசிய நெடுஞ்சாலை 7, பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி முடிய தேசிய நெடுஞ்சாலை 7-எ ஆகும். தேசிய நெடுஞ்சாலை 7ஏ-இல் சாலை வளைவுகளை நோக்கி மேம்பாடு செய்தல், சாலையின் போக்கை திருத்தி அமைத்தல் ஒருவழிப் பாதையை இரு வழிப்பாதையாக அகலப்படுத்துதல், மேம்பாடு திட்டங்கள் இந்திய அரசுக்கு ஆறாவது திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசு சில பணிகளுக்கு ஒப்புதலளித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் விரிவுபடுத்துவதன் காரணமாகவும், தூத்துக்குடியில் அண்மைக்காலத்தில் பல முக்கியத் தொழில்கள் தொடங்கப்பட்டு இருப்பதன் காரணமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகரத்தில் இருந்து அந்த தேசிய நெடுஞ்சாலை செல்வதாலும் அந்த தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வளைவுகளை நேராகவும், அந்தச் சாலையை விரிவுபடுத்தவும், மைய அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விரிவுபடுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பல்வேறு வேலைகள் அந்த 7-ஏ என்ற தேசிய நெடுஞ்சாலையில் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1 கோடியே 60 லட்சம் ரூபாய் 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

தருமபுரி நகராட்சியால் வாங்கப்பெற்ற இரும்புத் தொட்டிகள்.

*வினா எண். 568—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி நகராட்சியில் 1970-ம் ஆண்டு வாங்கப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள இரும்பால் செய்யப்பட்ட டேங்குகள் பயன்படுத்தப்படாமல் அழிந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) 1969—ம் ஆண்டு தர்மபுரி நகராட்சியில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 95,770 செலவில் இரண்டு இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் வாங்கப்பட்டு, நகரில் பாதுகாக்கப்பட்ட

1984 மார்ச் 20]

குடிநீர் திட்டம் செயல்படும்வரை பயன்படுத்தப்பட்டது. 1978-ம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் மூலம் மக்களுக்கு குடிநீர் தேவையான அளவு விநியோகிக்கப் பட்டு வருவதால், இந்நகராட்சிக்கு தற்போது இந்த நீர்த் தொட்டிகளைப் பயன்படுத்தும் அவசியம் இல்லை. இத் தொட்டிகளை தேவைப்படும் வேறு நகராட்சிகள், அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்றுவிடுவது பற்றி நகராட்சி ஆணையர் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம்:

வினா எண். 569—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) வடஆற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில்வே (ஜங்ஷன்) ஸ்டேஷன் மேலே மத்திய அரசு உதவியுடன் மேம் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா?

(ஆ) ஆமெனில் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை ஒரு பெரிய ஜங்ஷன். அது ஜோலார்பேட்டை யின் மத்தியில் இருக்கிறது. ஆகவே, ஒரு பக்கத்தில் இருக்கும் மக்கள் மறு பக்கம் போகவேண்டும் என்றால் மிகவும் சிரமப் படுகிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பற்றிய திட்டம் இப்போது இல்லை என்பதைத்தான் முதலி லேயே தெரிவித்தேன்.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, அங்கே ஒரு மேம்பாலம் இல்லாத காரணத்தால் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்கு போக்குவரத்து செல்வதில்பல் வேறு இடையூறுகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கேட் அடிக்கடி மூடப்படு வதால், ஏறக்குறைய 6 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டி யிருக்கிறது. அதோடு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS